**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**01 ஜனவரி 2016 / 20 ரபீவுல் அவ்வல் 1437**

# <u>ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் வாழ்வில் காணப்படும் சிறந்த மதிப்பீடுகளைப் பின்பற்றுதல்</u>

اَلْحَمْدُ لله الْمَلِكِ الْحَقِّ الْمُبِيْنِ الَّذِي أَبَانَ لِعِبَادِهِ مِنْ آيَاتِهِ مَا
بِهِ عِبْرَةٌ لِلْمُعْتَبِرِيْنَ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ
لَهُ إِلَهَ الأَوَّلِيْنَ وَالآخِرِيْنَ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ
وَرَسُوْلُهُ الْمَبْعُوثُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ. اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيمًا كَثِيْرًا . أَمَّا بَعْدُ فَيَا
عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பக்தியை அதிகரித்துக் கொள்ள நாம் அனைவரும் இணைந்து முயற்சிப்போமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போமாக! அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! அப்போது நாம் நேற்றைய தினத்தை விட, இன்று, சிறந்த முஸ்லிம்களாக ஆக முடியும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

நாம் இன்னும் புனிதமிக்க ரபீவுல் அவ்வல் மாதத்தில் இருந்துக் கொண்டிருக்கின்றோம். இம்மாதம் நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் பிறந்த மாதமாகும். எனவே, இறைத்தூதர்களில் சிறந்தவராகத் திகழும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் சமுதாய மக்களாக நம்மை ஆக்கியதற்காக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நாம் தொடர்ந்து நன்றி செலுத்துவதே பொருத்தமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பார்வையில் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் அந்தஸ்த்து மிகச் சிறப்பாக இருப்பதால், அவர்களின் சமுதாயத்தினர் எனும் ரீதியில் நாம் பல்வேறு சிறப்பம்சங்கள் அருளப்பெற்றுள்ளோம்.

இம்மாபெரும் சிறப்பம்சத்தை நமக்கு வழங்கியதற்காக, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிற்கு, வெறும் வார்த்தைகள், வேண்டுதல்கள், நமது உதடுகளில் தவழும் புகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலம் மட்டும் நன்றி தெரிவித்தால் போதுமாகாது. அல்லாஹ்வின் ஒரு உண்மையான அடியார், உண்மையாகவே நன்றி தெரிவிக்க விரும்பும் ஒரு சமுதாயம் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் இறைத்தூதராக அனுப்பப்பட்ட தற்கான உண்மையான நோக்கத்தை அறிபவர்களாகவும் அதில் சிந்தனை செய்பவர்களாகவும் இருப்பார்கள். திருக்குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ள அந்த நோக்கத்தை நாம் அறிவதன் மூலமாக சிந்திக்க முற்படுவோமாக! உதாரணமாக, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அத்-தவ்பா” எனும் அத்தியாயத்தின் 128-வது வசனத்தில் கூறுகின்றான்:

لَقَدْ جَاءَكُمْ رَسُولٌ مِّنْ أَنفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا
عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُم بِالْمُؤْمِنِينَ رَءُوفٌ
رَّحِيمٌ ﴿١٢٨﴾

பொருள்: (பாருங்கள்!) உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்காளாவது அவருக்குக் கடினமாக இருக்கிறது. மேலும், உங்களுடைய வெற்றியில் பேராவல் கொண்டவராகவும், நம்பிக்கையாளர்கள் மீது அதிகப் பரிவும், கருணையும் உடையவராகவும் அவர் இருக்கின்றார்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மேலும் திருக்குர்ஆனின் ”அல்-மாயிதா” எனும் அத்தியாயத்தின் 15-16 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

قَدْ جَاءَكُم مِّنَ اللَّهِ نُورٌ وَكِتَابٌ مُّبِينٌ ﴿١٥﴾
يَهْدِي بِهِ اللَّهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهُ سُبُلَ السَّلَامِ
وَيُخْرِجُهُم مِّنَ الظُّلُمَاتِ إِلَى النُّورِ بِإِذْنِهِ
وَيَهْدِيهِمْ إِلَىٰ صِرَاطٍ مُّسْتَقِيمٍ ﴿١٦﴾

பொருள்: அல்லாஹ்விடமிருந்து பேரொளி மிக்க, சத்தியத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்ற திருமறை உங்களிடம் வந்துள்ளது. அல்லாஹ்வின்

திருப்பொருத்தத்தை விரும்புவோருக்கு அல்லாஹ் அதன் மூலம் சாந்திக்கான வழிகளைக் காண்பிக்கின்றான். மேலும், அவன் தனது கட்டளையைக் கொண்டு இருள்களிலிருந்து அவர்களை வெளியாக்கி ஒளியின் பக்கம் கொண்டு வருகிறான். இன்னும் அவர்களை நேர்வழியின் பக்கம் வழிகாட்டவும் செய்கின்றான்.

மேலும், அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அல்-அன்பியா” எனும் அத்தியாயத்தின் 107-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَمَآ أَرۡسَلۡنَٰكَ إِلَّا رَحۡمَةٗ لِّلۡعَٰلَمِينَ ١٠٧

பொருள்: (நபியே!) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பான வழியையும் ஏற்படுத்தவே அனுப்பப்பட்டார்கள் என மேற்கண்ட அனைத்து வசனங்களும் தெளிவுபடுத்துகின்றன. உண்மையில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையும் அதற்கு முன்மாதிரியாக இருந்தது. இறைத்தூதர்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் ஆய்வு செய்து பார்த்தால், அவர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் நமக்குப் பயனளிக்கும் பல்வேறு பாடங்கள் மற்றும் வழிகாட்டுதல்களால் நிரம்பியுள்ளதைக் காணலாம். அனைத்துலகையும் படைத்தாளும்

அல்லாஹ்வுடனான அவர்களின் தொடர்பு, தனது குடும்பம், தன்னைப் பின்பற்றியவர்கள், அண்டை வீட்டார், நண்பர்கள் போன்ற மற்ற மக்களுடனான அவர்களின் தொடர்பு, அவர்களை எதிர்த்தவர்களுடனான அவர்களின் தொடர்பு, சுற்றுப் புறச் சூழல்களுடனான அவர்களின் தொடர்பு ஆகிய அனைத்து அம்சங்களையும் அவர்களின் முன்மாதிரி சூழ்ந்துள்ளது.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-அஹ்ஸாப்” எனும் அத்தியாயத்தின் 21-வது வசனத்தில் கூறுகின்றான்:

لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ اللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُو اللَّهَ وَالْيَوْمَ
الْآخِرَ وَذَكَرَ اللَّهَ كَثِيرًا ﴿٢١﴾

பொருள்: உண்மை யாதெனில், உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகின்றவராகவும், அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருபவராகவும் இருக்கின்ற ஒவ்வொருவர்க்கும்! அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருந்தது.

எனவே, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் நமக்குக் போதிக்கப்பட்டுள்ள சிறந்த மதிப்பீடுகளை, போதனைகளை நாம் நன்றாக அறிய வேண்டும். அவற்றை நமது அன்றாட வாழ்வில் எவ்வாறு செயல்படுத்த முடியும் எனச் சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு ஹதீதில் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்:

எனது இறைவன் ஒன்பது விஷயங்களைச் செயல்படுத்துமாறு எனக்குக் கட்டளையிட்டுள்ளான். தனியாக இருக்கும் போதும் பகிரங்கமாக இருக்கும் போதும் அல்லாஹ்வைப் பயந்து கொள்ள வேண்டுமென்றும், கோபமாக இருந்தாலும் அமைதியாக இருந்தாலும் நீதத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், வறுமை, செழுமை ஆகிய இரு நிலைகளிலும் சமநிலையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், என்னை விட்டும் பிரிந்து சென்றவர்களுடன் நான் சேர்ந்து வாழ வேண்டுமென்றும், யார் என்னிடமிருந்து பொருட்களைப் பறித்துக் கொண்டார்களோ அவர்களுக்கு நான் கொடுக்க வேண்டுமென்றும், எனக்கு எதிராகச் செயல்பட்டு தவறிழைத்தவர்களை நான் மன்னிக்க வேண்டுமென்றும், எனது மௌனம் தியானமாக அமைய வேண்டுமென்றும், என்னுடைய வார்த்தைகள் இறைவனை நினைவுகூர்வதாக இருக்க வேண்டுமென்றும், எதையும் பார்க்கும் போது கூர்ந்து கவனிக்க வேண்டுமென்றும் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அத்தப்ரீஸி, ஹதீது நூல்: மிஸ்காத் அல்-மஸாபீஹ்)

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட தன்மைகள் பின்பற்றப்பட்டால் நமக்கு அவை முடிவில்லாத பயன்களை அளிக்கும். கருத்துவேறுபாடுகளை, சண்டை சச்சரவுகளை நாம் தவிர்க்க முடியும். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்டுள்ள இச்சிறப்பானத் தன்மைகள் பின்பற்றப்பட்டால் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பார்வையிலும் சக மனிதர்களின் பார்வையிலும் நமது அந்தஸ்து உயரும். இவ்விதமான மதிப்பீடுகள் தொடர்ந்து

இருப்பவையாகும். எக்காலத்திலும் பின்பற்ற முடிகின்றவையாகும். அவற்றின் மூலம் காலத்தின் சவால்களை நாம் எதிர்கொள்ள முடியும். நாம் மற்றவர்களோடு நேருக்கு நேர் தொடர்பு கொண்டாலும் சரி, ”ஸ்கைபி” போன்ற சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பு கொண்டாலும் சரி, எந்நிலையில் இவை பின்பற்றப்பட்டாலும் நல்ல பலன்களை நமக்கு அளிக்கும்.

ஜமாஅத்தார்களே நினைவில் கொள்ளுங்கள்!

தொழில் நுட்ப முன்னேற்றங்களின் காரணமாக தகவல் தொடர்பு கொள்வதற்கான ஊடகங்கள் மாறிக் கொண்டே இருக்கலாம். அவை அதிநவீனமானதாகவும், மிக விரைவில் தொடர்பு கொள்வதற்கு உதவியாகவும் இருக்கலாம். எனினும், அவ்வூடகங்கள் தொடர்ந்து மனிதர்களால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் என்பதில் மாற்றம் இருக்காது. எனவே, மனிதத்தன்மை எனும் மதிப்பீடும் தொடர்ந்து இருப்பது அவசியமாகவுள்ளது. மேலும், நமது இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதும் அவசியமாகும்.

இம்மதிப்பீடுகள், நற்பண்புகளையும் உறுதியான ஆன்மீகத்தையும் வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும். சவால்களும் வேகமான மாற்றங்களையும் கொண்டுள்ள இவ்வுலகை எதிர்கொள்வதற்குத் தேவையான சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்வதற்கும் உதவியாக இருக்கும்.

இதன் மூலம், உறுதியான நம்பிக்கை (அகீதா) மிக்க, நற்பண்புகள் (அக்லாக்) மிக்க, கல்வியறிவுமிக்க, கொள்கைப் பிடிப்புள்ள, அண்டை

வீட்டாருக்கு நலன் பயக்கக்கூடிய, சகிப்புத்தன்மைமிக்க, பல்வேறு கருத்துகள் ஏற்படும் போது தன்னம்பிக்கைமிக்க, சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் எப்போதும் ஆக்கப்பூர்வமாகப் பங்காற்றக் கூடிய முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்குவது நோக்கமாகும்.

இன்ஷாஅல்லாஹ், இந்த 2016-வது ஆண்டில், நமது இந்த மிம்பர் இஸ்லாத்தினால் போதிக்கப்பட்ட, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் முன்மாதிரியாகக் காண்பிக்கப்பட்ட மதிப்பீடுகளைப் பற்றி விவாதிக்கும். நாம் இப்புதிய ஆண்டை, மற்றவர்களை மன்னிப்பதன் மூலம் ஆரம்பிப்போமாக!

இப்பிரசங்கம், நமது வாழ்வில் இஸ்லாத்தின் சிறந்த மதிப்பீடுகளைப் பிரகாசிக்கச் செய்யட்டுமாக! அவ்வாறு நாம் செய்யும் போது, நமது நம்பிக்கை வெளிப்படும்; நமது நற்காரியங்கள் உயர்வாக மதிக்கப்படும்; அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மற்றும் சக மனிதர்களின் பார்வையில் நமது அந்தஸ்து உயரும். இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.